# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.196 /2016

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தர்ராஜன் | வா.சா.–1 | |
| த/பெ. | மாணிக்கராஜ் | | |
| கிராமம் | | தொழில் | எலக்ட்ரிசியன் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 58 |

---

முதல் விசாரணை 14–11–2025.

நான் இந்த வழக்கின் 2ம்வாதி. 1ம் வாதி என் மனைவி. அவர் இறந்துவிட்டார். 3ம் வாதி என் மகன். அவருக்காகவும் சேர்த்து இந்த நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். என்னுடைய பவர் ஏஜெண்டான சித்ரா என்பவர் மூலம் தாவா வழக்கை நடத்திவந்தேன். மேற்படி பவர் ஏஜெண்ட் 03.06.2024ம் தேதி நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்து எங்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 04.05.2025 அன்று அவர் இறந்துவிட்டார். அவரது சாட்சியமும் நீக்கறவு செய்யப்பட்டுவிட்டது. கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) 21.06.2004ம் தேதிய வாதிக்கு ருக்மணியம்மாள் எழுதிக்கொடுத்த பதிவு இனாம் சாசனம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 21.10.2016ம் தேதிய தாவா 1வதுலக்க சொத்துக்கு 30 ஆண்டுகளுக்குரிய வில்லங்க சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 25.10.2016ம் தேதிய 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பிய புகார் மனு கைநகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் –2 அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 20.01.2016ம் தேதிய வாதி பெயரில் செலுத்தப்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 25.10.2016ம் தேதிய வாதி 5ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனு கைநகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 05.10.2016ம் தேதிய வாதி பெயரில் செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) வாதி, 5ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 23.10.2016ம் தேதிய பவர் பத்திரம் அசல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 03.10.2023ம் தேதிய 2ம் வாதி சித்ராவிற்கு எழுதிக்கொடுத்த அசல் சிறப்பு பவர் பத்திரம் அசல் ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) 09.06.2003ம் தேதிய வாதியின் மாமியார் ருக்மணியம்மாள் தாவா 1வது லக்க சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தை கிரயம் வாங்கிய பதிவு கிரய ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 22.02.2001ம் தேதிய பொன்னுத்தாய் என்பவருக்கு சாரதாமணி எழுதிக்கொடுத்த பதிவு கிரய ஆவணம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) 09.12.1998 ம் தேதிய சாரதாமணி என்பவருக்கு குல்லூர்சந்தை பலிஜ கவர இளைஞர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரயபத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 11.03.2022 ம் தேதிய சுந்தரமகாலிங்கத்திற்கு நல்லையன் வகையறா எழுதிக்கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

15) 24.02.2023 ம் தேதிய 2 ம் வாதிக்கு 3 ம் வாதி எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

16) வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த முதல்நிலை அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17) முதல்நிலை அறிக்கையுடன் வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18) வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த இறுதி அறிக்கை நீ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19) வழக்கறிஞர்/ஆணையர் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்த வரைபடம் நீ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.14 16:43:58 +0530